தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1979 பிப்ரவரி 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

திரு. துரை முத்துசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு சட்டமன்ற விடுதியிலே கொடுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் 15 ஆம் தேதிக்கான கேள்விகளையே கொடுத்திருக்கிறார்கள். இங்கே வந்த பிறகுதான் 14ஆம் தேதிக்கான கேள்விகளைப் பார்க்க நேர்ந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைக்கே நான் இதற்குப் பதில் சொன்னேன், இரண்டு நாட்களுக்கும் சேர்த்து அனுப்பியிருக்கிறார்கள். அதிலே 14 ஆம் தேதியையும் சேர்த்து அனுப்பியிருக்கிறார்கள்,

திரு. துரை முத்துசாமி : எனக்கு அதிலே 14ஆம் தேதி கேள்விகள் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டையும் சேர்த்து கொடுத்திருக்கிறார்கள், ஆனால் அதைத் தாங்கள் பார்க்கவில்லை.

கோடைக்கானல் மலைப்பகுதி மேம்பாடு

*வினா எண். 41—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டம் கோடைக்கானல் மலைப்பகுதியை மேம் படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் என்றால் அதன் விவரம் என்ன?

(இ) இதில் மண்வள அரிப்புத் தடுப்புத் திட்டம் இணைக்கப் பட்டிருக்கிறதா?